நிதி (சி.எம்.பி.சி.)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை — 600 009.

**கடித எண் : 31999 / சி.எம்.பி.சி. / 2011—1, நாள்: 27—06—2011**

அனுப்புநர்
இரா. விஜயா, எம்.ஏ., பி. எட்.,
அரசு சார்புச் செயலாளர் மற்றும்
பொதுத் தகவல் அலுவலர்.

பெறுநர்
திரு. ஆ.தண்டபாணி,
எண். சி-32 / ஏ-16,
என்.ஜி.ஜி.ஓ நகர், தாந்தோணிமலை,
கரூர் - 639 005.

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம்,2005 கீழ், ஊதிய நிர்ணயம் குறித்து தகவல் கோரியது – தொடர்பாக.

பார்வை: 21-06-2011 அன்று இத்துறையில் பெறப்பட்ட தங்களின் 15-06-2011 நாளிட்ட மனு.

********

பார்வையில் காணும் தங்கள் மனுவின் மீது கவனம் ஈர்க்கப்பட்டு கீழ் கண்டவாறு தகவல் வழங்கப்படுகிறது :

**கேள்வி எண்.1:** அரசாணை (நிலை) எண்.23, நிதி(ஊ.பி)த் துறை, நாள்:12-01-2011, பத்தி 4-ல் கொடுக்கப்பட்டுள்ள தெளிவுரையின்படி, 01-01-2011 அன்று இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் சாதாரணநிலையில் ரூ.2800/- தரஊதியம் பெறுபவர்களுக்கு மட்டுமே தனி ஊதியம் ரூ750/- அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்காணும் அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறப்புப் படியான ரூ.500/-, தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலையில் முறையே ரூ.9300-34800 + தரஊதியம் ரூ.4300/- மற்றும் ரூ.9300-34800 + தரஊதியம் ரூ.4500/- பெறும் இடைநிலை ஆசிரியர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**கேள்வி எண்.2:** அரசாணை (நிலை) எண்.23, நிதி(ஊ.பி)த் துறை, நாள்: 12-01-2011-ல் திருத்தியமைக்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கான ஊதிய விகிதம் அப்பணியிடத்திற்கு மட்டுமே பொருந்தும். மேலும், இவ்வூதிய திருத்தம் பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு இணையாக உள்ள பிறவகை பணியிடத்திற்கு நீட்டிப்பு செய்து எவ்வித அரசாணையும் இதுநாள் வரையில் வெளியிடப்படவில்லை.

// த. பி. பா. //